Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் FCM' இன் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிதி மற்றும் அரசுகளுக்கு இடையிலான ஏற்பாடுகள் பற்றிய நிலைக்குழுவின் (ஸ்டாண்டிங் கமிட்டி) துணைத்தலைமைப் பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்**

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 13, 2020) – இன்றைய தினம், ப்ராம்ட்டன் பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிதி மற்றும் 'அரசுகளுக்கு இடையிலான' ஏற்பாடுகள் பற்றிய நிலைக்குழுவின் (ஸ்டாண்டிங் கமிட்டி) துணைத்தலைமைப் பொறுப்பாளராக FCM இன் தலைவர் கார்த் ஃப்ரிஸ்ஸெல் அவர்களால் நியமிக்கப்பட்டார் என்று கனடா நாட்டின் நகராட்சிகளுக்கான (FCM) கூட்டமைப்பானது அறிவித்திருக்கிறது. கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்கள், கமிட்டித் தலைவரும் சாஸ்க்கட்டூன் (Saskatoon) நகரின் வார்டு 7 இன் கவுன்சிலருமாகிய மெய்ரின் லொவென் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவார்.

FCM இன் நிலைக்குழுக்கள் விவரமான விவாதத்திற்கு ஏற்பாடு செய்வார்கள்; மற்றும் முன்னுரிமை கொண்ட கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் பேரிலான பிரச்சனைகளுக்கு FCM மன்றத்திடம் பரிந்துரைகளை சமர்ப்பிப்பார்கள். தலைமைப்பொறுப்பு மற்றும் துணைத்தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் தலைமைப் பொறுப்பில் திடமாக இருக்க வேண்டும் மற்றும் தங்களின் ஆணைகள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் யுக்திகள் மீதான கமிட்டியின் செயல்பாடுகளை வழிநடத்தவும் வேண்டும்; இதன் மூலமாக, அக்கறை கொண்டதும் விளைபலன் கொண்டதுமான கலந்துரையாடலில் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் உறுதி செய்வார்கள். ஒவ்வொரு கமிட்டியும் ஒரு ஆண்டில் மூன்று முறை சந்திக்கும்; இது இயக்குனர் மன்ற கூட்டங்கள் நடைபெறும் சமயத்திலேயே நடைபெறும்.

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, கனடிய நகராட்சிகள் மற்றும் நமது கூட்டமைப்பில் இருப்பவர்களுடன் சேர்ந்து, கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது; மேலும் உள்கட்டமைப்பு, காலநிலை மாற்றம் மற்றும் வெள்ளக் குறைப்பு, பேருந்து போக்குவரத்து விரிவாக்கம், ஹூரோன்ட்டோரியோ-பிரதான சாலை எல்.ஆர்.டி மற்றும் COVID-19 தொற்றிலிருந்து நிவாரணம் ஆகிய ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கான முக்கிய முன்னுரிமை கொண்ட விஷயங்கள் குறித்து தொடர்ந்து வாதிடும்.

அக்டோபர் 2020 இல், கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்கள் ஒரு வருட காலத்திற்கு கனடிய நகராட்சிகளின் இயக்குநர்கள் மன்ற கூட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1901 முதல் கனடாவின் நகராட்சி ஆளுமைக்கு தேசியக் குரலாக இருந்து வருவது FCM ஆகும். கனடாவின் நகரங்கள் மற்றும் கிராமப்புற சமூகங்கள் ஆகியவற்றில் தொடங்கி, வடக்குப்பகுதியில் இருக்கும் சமூகங்கள் மற்றும் 20 மாகாண மற்றும் பிராந்திய நகராட்சி சங்கங்கள் வரை அனைத்து அளவிலான 2,000 க்கும் மேற்பட்ட நகராட்சிகள் இதில் உறுப்பினர்களாவர். நாட்டில் இருக்கும் மூன்று கரையோர பகுதிகளில், ஒரு கரையில் இருந்து இன்னொரு கரை வரை மற்றும் இன்னொரு கரையிலிருந்து மற்றும் ஒரு கரை வரை பரந்து இருக்கும் கனடிய நாட்டு மக்களின் 90 சதவீதத்திற்கும் அதிகமானவர்களுக்கு இவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்; ஒவ்வொரு ஆண்டும் முக்கிய விஷயங்களில் FCM கொள்கையை அமைப்பதற்காக ஒன்றுகூடுகிறார்கள்.

ஒரு கரையில் இருந்து இன்னொரு கரை வரை மற்றும் இன்னொரு கரையிலிருந்து மற்றும் ஒரு கரை வரை, நாட்டில் பரந்து இருக்கும் கனடிய நாட்டு நகராட்சிகளை, ப்ராம்ப்ட்டன் நகர சபையின் நடவடிக்கைகளும் மற்றும் சபை முன்னுரிமைகளுக்கான காலம் (Term of Council Priorities) ஆகியவையும் பிரதிபலிக்கின்றன, இதில் மலிவு விலை வீடுகள், போக்குவரத்து வசதி, காலநிலைக்கேற்ற நடவடிக்கை, பன்முகத்தன்மையைக் கொண்டாடுதல் மற்றும் இனவெறி எதிர்ப்புக் கொள்கையை செயல்படுத்துதல் மற்றும் வணிகங்கள் மற்றும் சமூகத்தினருக்கு COVID-19 தொற்று பரவலின் பேரில் இழந்த பொருளாதாரத்தை, பாதுகாப்பாக மறுதொடக்கம் செய்தல் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகின்றன.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ கனடாவின் மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக இருந்தபடி, நாங்கள் செய்யும் எல்லா விஷயங்களின் மையக்கருத்தாக நமது மக்கள் இருக்கிறார்கள். நமது குடியிருப்பாளர்களே நாட்டின் இளம் வயதினர் மற்றும் மிகவும் பல இன மக்களால் ஆனவர்கள்; கனடா மற்றும் அதற்கு அப்பால் உள்ள முதலீட்டை ஈர்ப்பதற்கான மிகவும் திறமையான தொழிலாளர்களாகவும் இருப்பவர்கள். கனடிய நகராட்சிகள் மற்றும் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்காக, நகராட்சி நிதி மற்றும் அரசுகளுக்கு இடையிலான ஏற்பாடுகள் செய்யும் அமைப்பின் துணைத் தலைவராக பணியாற்ற நான் ஆர்வமாக உள்ளேன். இந்த ஆண்டு, COVID-19 தொற்றினை சமாளிப்பதில், அதிக ஒத்துழைப்பு தருவதும்/பெறுவதும் நமது சமூகங்களுக்கு சிறந்த பலன்களை ஏற்படுத்தும் என்பதை நாங்கள் தெளிவாகக் கண்டோம்.”

– *ரொவீனா சான்ட்டோஸ், கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம்; உறுப்பினர், FCM இயக்குனர் மன்றம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான திட்டங்களுக்கு அரசாங்கத்தின் பிற மட்டங்களுடன் கூட்டாக நிதியளிக்கப்படுகின்றன. பேருந்து போக்குவரத்து, வெள்ளத் தணிப்பு அல்லது பாதுகாப்பான மறுதொடக்கத்திற்கான ஒப்பந்தம் என்று வரும்போது, எங்கள் கூட்டமைப்பில் இருக்கும் கூட்டாளர்களுடனான வலுவான ஒத்துழைப்பே ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு சிறந்த பலன்களைத் தருகிறது என்பதை நாங்கள் அறிவோம். குடும்பங்கள், வணிகங்கள் மற்றும் கனடாவின் பொருளாதார மீட்சிக்கு

(இதில் ப்ராம்ப்ட்டன் முக்கிய பங்களிப்பாளராக இருந்துள்ளது) ஆதரவளிக்க நாங்கள் கூட்டாளியாக இருப்பதால், நமது நகரத்திற்கு இந்தப் பதவியில் இருந்தபடி சேவை செய்ய கவுன்சிலர் சாண்டோஸ் நியமிக்கப்பட்டதில் கவுன்சில் சார்பாக, நான் மகிழ்ச்சியடைகிறேன். ”

– *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca